**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 20—4—1990 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

64. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

65. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1987–88 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை [1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

108. கோரிக்கை எண் 1—வருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

109. கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

1990 ஏப்ரல் 19]

110. கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1990–91 (தமிழ், ஆங்கிலம்).

111. வருவாய்த் துறை பற்றிய செயலாக்கத்திட்டம், 1990-91 (ஆங்கிலம்).

112. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பதாவது அறிக்கை, 1989-90.

113. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தியொன்றாவது அறிக்கை, 1989-90.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS